**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – மாற்றுத் திறனாளிகள் சுயதொழில் புரிய உதவும் வகையில் ‘‘இரு கைகளும் நல்ல நிலையில் உள்ள கால்கள் பாதிக்கப்பட்ட மற்றும் செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு விலையில்லா மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டம்’’– 2015–16 ஆம் நிதியாண்டிற்கு திட்டத் தொடராணை மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்குவது– ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.43 நாள்:23–07–2015

மன்மத, ஆடி 7,

திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.38, மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2)த் துறை, நாள் 18–07–2014.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.3564/மா.தி.ந.3.1/2015, நாள் 23.6.15.

––––––

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2014–15 ஆம் நிதியாண்டில், மாற்றுத் திறனாளிகள் சுயதொழில் புரிய உதவும் வகையில், 1800 பயனாளிகளுக்கு விலையில்லா மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் (இயந்திரம் ஒன்றின் விலை ரூ.4,000/–)வாங்கி வழங்கும் திட்டத்திற்கு திட்டத் தொடராணையும் மற்றும் இச்செலவினத்திற்கென ரூ.72,00,000/– நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், மாற்றுத் திறனாளிகளுக்கு சுயதொழில்புரிய உதவிடும் வகையில், இரு கைகளும் நல்ல நிலையில் உள்ள கால்கள் பாதிக்கப்பட்ட மற்றும் செவித் திறன் குறையுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு, விலையில்லா மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டத்திற்கு, 2015–2016 ஆம் நிதியாண்டில், திட்ட தொடராணையும், மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரம் ஒன்றின் விலை ரூ.4000/– வீதத்தில், 1800 பயனாளிகளுக்கு வாங்கி வழங்கிட ரூ.72,00,000/– நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்படி மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று பின்வருமாறு ஆணையிடுகிறது:–

(i) 2015–16ஆம் நிதியாண்டில் 1800 பயனாளிகளுக்கு மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் ஒன்றின் விலை ரூ.4,000/– என்ற வீதத்தில் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000ன்படி வாங்கி வழங்குவதற்கென ரூ.72,00,000/–க்கு (ரூபாய் எழுபத்து இரண்டு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

(ii) இரு கைகளும் நல்ல நிலையில் உள்ள கால்கள் பாதிக்கப்பட்ட மற்றும் செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு இத்திட்டத்தின் மூலம் விலையில்லா தையல் இயந்திரங்கள் வழங்கப்பட வேண்டும்.

(iii) ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகைக்குள், தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000ன்படி கொள்முதல் செய்யப்படும் தையல் இயந்திரத்தின் விலை கூடுதலாக இருந்தால், எண்ணிக்கையை குறைத்து கொள்முதல் செய்திடவும், தையல் இயந்திரத்தின் விலை குறைவாக இருந்தால், கூடுதல் எண்ணிக்கையில் கொள்முதல் செய்திடவும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

" 2235– சமூக பாதுகாப்பும் நலனும்–02– சமூக நலன்–101–மாற்றுத் திறனாளிகள் நலன் – I திட்டத்தில் சேராதது –CQ–மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் வழங்குதல் – 19– இயந்திரமும் சாதனமும் –01– வாங்குதல்".
(த.தொ. கு. 2235–02–101–CQ-1913)

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண்39473/நிதி(சந)/2015, நாள் 20.07.2015–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகம்மது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்/அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
மாநில தலைமைக் கணக்காயர்–18.
மாநில தலைமைக் கணக்காயர் –18. (பெயரில்)

**நகல்:**
நிதி(சந)த் துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.